கொள்வதற்கு காண்ட்ராக்டர்களுக்கு மூன்று முறை முயற்சி செய்தும் ஒரு காண்ட்ராக்டர்கூட முன்வரவில்லை. ஆகையால் இந்த வேலை அங்குள்ள கிராம மக்களுக்கு ஜாப் வொர்க்ஸாகக் கொடுப்பதற்குக்கூட அரசாங்கம் முன்வந்தது. ஆனால் யாரும் அந்த வேலையை எடுத்துக்கொள்ள முன்வரவில்லை. ஆகவே இப் பொழுது கொடுக்கப்படும் ரேட்டை அதிகமாகச் செய்யலாமா அல்லது லாரிகள் மூலமாக இந்த மண்ணை எல்லாம் எடுக்கலாமா என்பதைப்பற்றி பரிசீலனை செய்யப்படுகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : இம்மாதிரி நம் ராஜ்யத்தில் அதிக மான ஏரிகள் தூர்ந்து போய் இருக்கின்றன. காண்ட்ராக்டர்களும் அந்த வேலையை எடுத்துக் கொள்வதற்கு முன்வரவில்லையென்றால், அரசாங்கமே அந்த வேலையை எடுத்துக் கொள்வதற்கு யோசிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கெல்லாம் கண்ட்ராக்டர்கள் வரவில்லையோ, அங்கெல்லாம் டிபார்ட்மெண்ட் வேலையை எடுத்து நடத்துகிறது. காண்ட்ராக்டர்கள் வருகிற இடத்தில் சாதாரணமாக வேலை நடைபெற்றுவருகிறது.

* 1019 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

வடாற்காடு மாவட்டம் செய்யாறு வட்டத்தில் எத்தனை ஏரிகளில் மண் வார ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு பூ. கக்கன் : ஒன்று.

* 1020 கேள்வி.—**திரு. க. ர. முனிரத்தினம் :** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

ஆற்காடு தொகுதியில் திமிரி பிர்க்காவிலுள்ள வெங்கடாவரம் பக்கத்திலிருந்து திமிரி முதலிய ஊர்களிலுள்ள ஏரிகளுக்கு வரும் கால்வாய்கள் தூர்ந்திருப்பதைச் சீர்படுத்தத் திட்ட முண்டா ?

கனம் திரு. பூ. கக்கன்.—இல்லை, ஐயா.

* 1021 *Q.*—PULAVAR K. GOVINDAN (on behalf of SRI MUNU ADHI) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of tanks proposed to be repaired during 1962 in the Chingleput district and their estimated cost;

(*b*) how many have been repaired during the year 1961; and

(*c*) the expenditure incurred for the repairs in 1961?

THE HON. SRI P. KAKKAN : (*a*) 373 tanks at an estimated total cost of Rs. 42,25,950.

(*b*) 488 tanks

(*c*) Rs. 26,69,049.